ஸ்ரீ தந்வந்தரயே நம :

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை


பரிதாபி
ஆனி

JULY
1972

தொகுதி 34
பகுதி 7

Vol. 34
No. 7





ஆசிரியர் & பிரசுரகர்த்தா

வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.



வருஷச் சந்தா
ரூ. 5/-

Annual
Subscription
Rs. 5/-



| | |
|---|---|
| பதிவு கால வரை நீடிப்பு ... | 125 |
| இந்திய மருந்து செய்தொழிற்சாலைகள் தமது ஆராய்ச்சிக்கூடங்களை நிறுவவேண்டிய இன்றியமையாமை | 126 |
| ஆரோக்கிய கல்பத்துருமம் ... | 132 |



காரியாலயம் : 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

# வைத்யரத்னம் P. S. வாரியருடைய

# ஆர்ய வைத்தியசாலா

## கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered — THE ARYA VAIDYA SALA KOTTAKAL — Trade Mark.

தலைமை ஆபீஸ் போன்: கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்

| | |
|---|---|
| ஆபீஸ் - அட்மினிஸ்டிரேடர் - மானேஜர் தொடர்புடன் | போன் நெ 31 |
| நர்ஸிங்ஹோம் | போன் நெ. 44 |
| தலைமை வைத்யர் | போன் நெ. 25 |
| மானேஜிங் டிரஸ்டி | (வீடு) போன் நெ 27 |
| | (ஆபீஸ்) போன் நெ 61 |
| மானேஜர் | (வீடு) போன் நெ. 26 |

**சென்னை கிளை:**

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

**மற்ற கிளைகள்:**

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற
ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயாதரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

**மானேஜிங் டிரஸ்டி.**
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன்
## பிரைவேட் லிமிடெட்

(ஸ்தாபிதம் 1939)

விற்பனை அண்டு ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்
31-A, சின்னகடைத் தெரு,
திருச்சிராப்பள்ளி-2.
போன் எண் : 4202

## சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு முப்பது ஆண்டுகளாக பிரஸித்தமான இடம்.

பிரஸவித்த மாதர்கட்கு:

**ஸௌபாக்கிய ரஸாயனம்**

ஜீர்ண சக்தி, ரத்தவிருத்தி அளிக்கும் சிறந்த லேஹியம்,
300 கிராம் பாட்டில் ரூ. 5.

**பயஸ்யா**

தாய்ப்பாலை வளர்க்கும் திவ்ய ரஸாயன லேஹியம்.
300 கிராம் பாட்டில் ரூ. 5

— தபால் செலவு தனி —

சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்களின் மேற்பார்வையில் தயாரிக்கப்பெற்ற மற்ற எல்லா ஆயுர்வேத மருந்துகளும் இங்கு கிடைக்கும்.

வைத்தியர்களுக்கும் பொதுமக்களுக்கும்
— மிகவும் நம்பிக்கையான இடம் —

T. S ஈச்வரன், L.I.M.
மானேஜிங் டைரெக்டர்.

FOR PURE MUSK, KASHMIR SAFFRON, GOROCHAN & INDIAN CRUDE DRUGS

WRITE TO

# M/s. Kalia Brothers (Regd.)

**Wholesale Musk & Indian Drugs Merchants,**

JULLUNDUR CITY (PUNJAB)

**Gram: KALIA** | **Phone: Office - 3232**
**Resi. - 4343**

சுத்தமான கஸ்தூரி, காஷ்மீர் குங்குமப்பூ,

கோரோசனை மற்றும் மருந்து சரக்குகட்கு

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :

# கலியா பிரதர்ஸ் [ரிஜிஸ்டர்ட்]

கஸ்தூரி மருந்து சரக்கு மொத்த வியாபாரி,

ஜல்லந்தர் ஸிடி (பஞ்சாப்).

**தந்தி: KALIA** | **போன்: ஆபீஸ் – 3232**
**வீடு – 4343**

தந்தி : " அம்ருதம் "　　P. B. No. 1382.　　போன் : 26006

# தி ஆர்ய வைத்திய பார்மஸி

## (கோயமுத்தூர்) லிமிடெட்

தலைமை ஆபீஸ் : 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.

**உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுககும் சிறந்த இடம்**

எங்களுடைய கிளைகள் :

| | | |
|---|---|---|
| 1 | 23-B, பூஸா ரோடு, புது டில்லி-5 | போன் : 585687 |
| 2. | மொய்தீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1 | ,, 2984 |
| 3. | கௌடியா மடத்தெரு. மதராஸ்-14 | ,, 85752 |
| 4. | வளிஞ்ஞும்பலம், எர்ணுகுளம், கொச்சின்-16 | ,, 32336 |
| 5. | பிள்ளையார் கோயில் ரோடு, கண்ணனூர்-1 | ,, 92 |
| 6 | மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1 | ,, 195 |
| 7. | கடைவீதி பொன்னுனி | ,, 41 |
| 8. | ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர்-1. | ,, 378 |
| 9. | கோர்ட் ரோடு, ஆலத்தூர் | ,, 87 |
| 10 | மெயின் ரோடு, கஞ்சிக்கோடு | |
| 11. | ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18 | 33758 |
| 12. | இந்திரா பில்டிங, கள்ளிக்கோட்டை-2 | ,, 4891 |
| 13. | T. T. 384 K டெலிச்சேரி ரோடு கண்ணனூர்-2 | 842 |
| 14. | No 263. 64. 11 வார்டு, மெயின் ரோடு. எடப்பாள் (பொன்னுனி) | 31 |
| 15. | ஹல்வா பஜார் ரோடு, கள்ளிக்கோட்டை-1 | |

பாக்டரி :
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன் : 2)

நர்ஸிங் ஹோம் :
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன் ; 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

ஆர்ய வைத்தியன் P. V. ராம வாரியார்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

## வாரியர்

# க்ஷீரபலா 101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும், மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்துவந்தால் வாத ரோகங்களும் விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML. ரூ. 7-00 12 ML. ரூ. 3-75

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனுபஜார், தெப்பக்குளம போஸ்ட், திருச்சி-2.

PHONE : 5441 வீடு போன் : 6074

[1936-ல் நிறுவப்பட்டது].



# வைத்திய சந்திரிகா


தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

தொகுதி 34 | பரிதாபி ஆனி | பகுதி 7

Vol. 34 | 1972 ஜுலை | No. 7


श्री धन्वन्तरये नमः

## பதிவு கால வரை நீடிப்பு

பரம்பரை வைத்யர்களைப் பதிவு செய்வதை மேலும் ஓர் ஆண்டு காலத்திற்கு நீடித்திருப்பதாக அரசு அறிவித்துள்ளதை வரவேற்கிறோம். பதிவுக் கட்டணம் முதலியவை சிறிது அதிகப் படுத்தியிருப்பது தற்போதுள்ள பொருளாதார நிலைக்கேற்றதே. அதைப் பொருட்படுத்தவேண்டியதில்லை. பதிவு செய்வதற்குமுன் வைத்ய அறிவைப் பரீக்ஷிக்க ஒரு குழு பதிவுக்காக விண்ணப்பித் துள்ளவர்களை நேரிடையாகச் சில கேள்விகள் கேட்டுத் திருப்தி யடைந்தபின் பதிவுக்குச் சிபார்சு செய்யும் முறை இதுவரை நடை முறையிலுள்ளது. அதை எழுத்துப் பரீக்ஷையாக மாற்றி அதில் தேறியவர்களையே பதிவு செய்யவிருப்பதாக அரசு அறிக்கை கூறுகிறது.

இவ்விஷயத்தில் ஒரு சிரமம் ஏற்படலாம். குறிப்பிட்ட பாட நூல் அல்லது பொது அறிவு நூல் கற்றறிந்தவர்களே எழுத்து மூலப் பரீக்ஷைக்குத் தகுதி பெறுவார்கள். இன்றைய நாட்டு வைத்தியர்களின் சூழ்நிலையை அறிந்தவரை - பரம்பரை வைத் யர்களாகப் பதிவு பெற விண்ணப்பித்துள்ளவர்கள் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட பாட நூல் அல்லது மூல நூல் படித்து வைத்யம் பயின்றவர்களாக இருப்பதற்கில்லை மருந்து செய்முறை அறிவை யும் வைத்யத் தொழில் பயிற்சியையும் குருவின்கூட இருந்து தொழிற் பழக்கமாகப் பெற்றவர்களாகவே இருக்கக்கூடும் அவர் கள் அறிந்துள்ள மருந்துகள்கூட - அவைகளின் செய் முறைகள் கூட ஒரே விதமாக இருக்காது இந்நிலையில் ஒரே சீரான கேள்வித்தாள்கள் மூலம் அவர்களைச் சோதிப்பது பயன் தருமா என்று ஐயம் எழுகிறது. சிலருக்குச் சில பகுதிகளில் அறிவு அதிகம். அதிலேயே தொழில் செய்பவர்களாகவும் இருக்கலாம், அவர்களைப் பரீக்ஷை செய்ய கேள்வித்தாள் முறை சரியாகத் தேறுமா ? இவைகளைப் பதிவில் பொறுப்புள்ளவர்கள் கட்டாயம் கவனிப்பார்கள் என்றே நம்புகிறோம்.

# இந்திய மருந்து செய்தொழிற்சாலைகள் தமது ஆராய்ச்சிக்கூடங்களை நிறுவவேண்டிய இன்றியமையாமை

டாக்டர் ஒய். கொண்டல் ராவ், எல். ஐ. எம்.

இந்நூற்றாண்டின் நாகரீக வாழ்வியல் முன்னேற்றங்கள், பல துறைகளிலும் விரிவான முன்னேற்றங்களையுண்டாக்கியிருப்பதுடன், பல்வேறு துறைகளையும் ஒன்றோடொன்று சார்புடையனவாக ஒன்றித்துள்ளன. இன்று இம்முன்னேற்றங்களும் ஒன்றிப்பும் இந்திய மருத்துவர்களாலும், உணரப்பட்டிருப்பதுடன், இந்திய மருத்துவத்துறையானது, மருந்துப் பொருள் வாணிபமென்றும் (Raw Drug Trade) மருந்து செய்தொழிலென்றும் (Pharmaceutics), மருத்துவஞ் செய்தொழிலென்றும் (Medical Practice) மூன்று பிரிவுகளாகி பெரும் முன்னேற்றங்களையடைந்து வருகின்றது.

ஆக, இந்திய மருந்து செய்தொழில் (Indigenous Pharmaceutics) இன்று அளவிற் சிறியனவும் பெரியனவுமாகிய தொழில் நிறுவனங்களின் (Industries) பணியாக அமைந்துள்ளது. இந்நிறுவனங்களிற் பல, கடந்த ஐம்பதாண்டுக் காலமாக, நீராவியாலும் மின்னாற்றலாலும் இயங்கும் பல்வகைப் பொறிகளுடன், தகுதிபெற்ற சித்த ஆயுர்வேத யூனானி மருத்துவர்களின் மேற்பார்வையின் கீழ், மருந்துகளைச் செய்து முடித்துப் பணியாற்றி வருகின்றன இத்தொழிற்சாலைகள், பல நூறாயிரம் ரூபாய்கள் பெறுமானமுள்ள மருந்துகளை ஆண்டுதோறுஞ் செய்து விற்பினும், தாம் பயன்படுத்தும் மூலப் பொருட்களிலும் (Raw Drugs) கைக்கொள்ளும் முறைகளிலும் (Manufacturing Processes) முடிக்கப்பட்ட மருந்துகளிலும் (Prepared medicines) தரக்கட்டுப்பாட்டு ஆராய்ச்சிகளை (Standardization Research) இதுவரையிலும் மேற்கொள்ள முனையவில்லை.

இத்தொழிலிற் பலவகையான மரவடைப் பொருட்களும் (Botanicals) விலங்கினப் பொருட்களும் (Zoologicals) கனிப் பொருட்களும் (Inorganics) மூலப் பொருட்களாகப் (Raw materials) பல்வேறிடங்களிலிருந்து தருவிக்கப்பட்டுப் பயன் படுத்தப்பட்டு வருகின்றன

இப்பொருட்கள் பெரும்பாலும் சீரான தோற்றமும் தன்மையுமுள்ளனவாகக் காணப்படுவதில்லையென்பது, மேலோட்டமாகப் பார்க்கும் போதே தெரியவருகின்றன. பலவகை உப்புக்கள், பாடாணவகைகள், வைப்புச்சரக்குகள் ஆகியவற்றின் வேதியியற் கூட்டு (Chemical composition) இன்னமும் தெளிவாகத் தெரிந்தபாடில்லை. இரசம், வெள்ளி, செம்பு, காரீயம், நாகம்,

வெள்ளீயம், அயம், பொன் ஆகிய உலோகங்கள் மருந்துகளிற் சேர்க்கப்பட்டாலும் அவற்றின் தனித்தன்மையும் (Purity) இயற்கைக் கலப்பும் (Natural contamination) செயற்கைக் கலப்பும் (Adulteration or Sophistication) அறிந்து கொள்ள முயலாமல், கிடைத்தபடியே வாங்கப்பட்டு அப்படியே மருந்துகளிற் கொள்ளப்படுகின்றன.

சீரான தரங்கொண்ட மருந்துகளைச் (Medicines of uniform Potency) செய்ய மூலப் பொருட்களின் தரத்தையும் (Quality of raw drugs) கண்டுணர்ந்து பயன்படுத்தவேண்டும். இல்லாவிடில் முடிக்கப்பட்ட மருந்துகள் தரக்குறைவானதாகவே (Sub standard) முடியும்.

இந்திய மருந்துகளுக்குத் தரக்கட்டுப்பாடு (Standards) களைக் கொண்டுவர இந்திய அரசு முனைந்துள்ளது. இக்கட்டுப்பாடுகள் விரைவில் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவிருக்கின்றன. ஆகவே ஒவ்வொரு மருந்து செய்தொழிற்கூடமும் அதனதன் ஆராய்ச்சிக் கூடங்களைத் (Laboratories) தனது மருந்துகளின் தரத்தினைச் சீராகக் கடைபிடித்தற்கென்று அமைத்துச் செயல் படத் துவங்க இதுவே தக்க தருணம். இல்லையேல், அரசின் இதற்காக சட்டதிட்டங்கள் நடைமுறைக்கு வரும்போது இத்தொழிற்சாலைகள் திணறடிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

தாம் செய்த மருந்துகளின் தரத்தினைத் தாமே ஆய்ந்து, அரசு விதித்த வரையறைகளுக்கு ஏற்புடைய மருந்துகளையே விற்பனைக்கென வெளியிடுவதால் பின்னர் விளையக்கூடிய இடையூறுகள் தவிர்க்கப்படுவதுடன், நிறுவனத்தின் பெயரும் புகழும் குன்ருது நிலைபெறும்.

ஆயின், இத்தகைய ஆய்வுக்கூடங்களின் பணி, இத்துடன் நின்றுவிடக்கூடாது. இக்கூடங்கள் தமது அன்ருட ஆய்வுகளோடு, அரசினரால விதிக்கப்பட்ட தரவரையறைகளின் ஏற்பினையும் அவற்றிற் புலனுகக்கூடிய குறைகளையும் (Validity and defects in the standards Prescribed by the Governments.) ஆய்ந்து சுட்டிக்காட்டி விளக்குவதும் தமது சிறப்புப் பணியாகக் கொள்ளவேண்டும் ஏனெனில், இந்நாள்வரை, இந்திய மருந்துகள் செய்வதில் முடிக்கப்பட்ட மருந்துகளின் நிறம், மணம், சுவை மற்றும் நெய்ப்பு நுண்மை ஆகிய தன்மைகளே மருந்துகளின் தரத்திற்கு அளவுகோலாகக் கொள்ளப்பட்டு வருவதை யாவரும் அறிவர். இக்காலத்து அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களை (Scientific and technical advancements) நாம் இத்தொழிலுக்குப் பயன்படுத்திக் கொள்ளாதிருந்தோம். ஆகவே, ஒரு சில வருட ஆராய்ச்சிகளின் விளைவாக அரசு கொண்டுவரப்போகும் தரவரையறைகளில் சில, தவிர்க்க முடியாத குறைபாடுகளையாவது கொண்டிருக்கும். இவற்றினைச் சிறுகச் சிறுக நாம் நீக்கவேண்டியது நமது கடமையாகின்றது.

மீற முடியாத அளவிற்குச் சிறந்ததான தரக்கட்டுப்பாடுகளும் விதிமுறைகளும் தனித்தனி மருந்துகளுக்கு வரையறுக்கப் பட்டால், போலிகளை விற்றுப் பணங்குவிக்கும் சமுதாய எதிரி களின் உற்பத்திப் பொருட்கள் படுத்துப்போகும் மருத்து வர்க்கும் மக்கட்கும், சிறந்த மருந்துகள் இடையருது கிடைக்கும்.

ஆகவே, ஒவ்வொரு இந்திய மருந்து செய்தொழிற்கூடமும், ஒவ்வொரு ஆய்வுக்கூடம் அமைத்து, பின்வரும் மூன்று குறிக்கோள்களுடன் செயற்படவேண்டும்.

1. மூலப்பொருட்களின் தரவரையறைபற்றிய ஆராய்ச்சிகள்
2. மருந்து செய்முறைகளைப்பற்றிய ஆராய்ச்சிகள், மற்றும்
3. முடித்த மருந்துகளின் தரவரையறை பற்றிய ஆராய்ச்சிகள்.

இம்மூன்றின் நோக்கங்களைப்பற்றிச் சிறிது விளக்கிக்கூறி அவற்றின் இன்றியமையாமையை நிறுவுவோம்.

1. மூலப்பொருட்களின் தரத்தினைப்பற்றிய ஆராய்ச்சி களால், தரங்குறைந்தவைகளும், கலப்படமுடையனவும், போலி யானவையுமான சரக்குகளைக் கண்டுபிடித்து ஒதுக்கித்தள்ளி, உண்மையான சிறந்த மூலப்பொருட்களை மருந்துகளுக்குக் கொள்ளலாம் இதனுல் தொழில் நிறுவனம் ஏமாற்றப்படுவது தவிர்க்கப்பட்டு பணவிரயமும் தடுக்கப்படுகிறது தவருன அல்லது தரங்குறைந்த மூலப்பொருட்களைக் கொள்வது தொடர்ச்சியான பல தவறுகளையும் இடையூறுகளையும் ஏற்படுத்து மென்பது தெளிவு.

இம்மூலப் பொருட்களில் சிலவற்றில் காணக்கிடைக்கும் போலி மற்றுங் கலப்படங்களிற் சிலவற்றைக் காண்போம். மதனகாமேசுரத்தின் தண்டுத் துண்டங்கள் பால் முதுக்கன் கிழங்கெனவும், பாகற்கொடிகள் பேய்ப்புடலெனவும், போலியாக விற்கப்படுகின்றன. சத்தெடுக்கப்பட்ட குங்குமப்பூவும் சில வகைத்தாள்களும் மீண்டும் சாயமேற்றப்பட்டு உண்மையான குங்குமப்பூவென விற்கப்படுகிறது. இவ்வாறே புனுகில் மெழுகும் கோரோசனத்தில் மஞ்சள்தூளும், சந்தனச்சீவலில் மற்ற மரச்சீவல்களும் கலப்படஞ் செய்யப்படுகின்றது. கலப்படமற்ற எண்ணெயும தேனும் இந்நாளில் மிகவும் அருகி வருகின்றன. பல உப்புவகைகளைப் பற்றியும், வைப்புச்சரக்குகள் பாடாணங்கள் பற்றியும், மீனம்பர், கத்தூரி போன்ற பொருட்களைப்பற்றியும், முழுமையாகத் தெரிந்தபாடில்லை. இவற்றிற்கெல்லாம் முடிவு காண அறிவியல் முறையில், உயிரியல், வேதியியல் ஆகிய துறை களின் துணை கொண்டு முன்னேற்றங்காண முனைந்திட வேண்டும்.

இத்தகைய மூலப்பொருள் ஆராய்ச்சியால் ஒரு பொருளின் கலப்பற்ற தன்மை மட்டுமன்றி அதிலிருக்கும் மருந்தியற் பொருளின் (Active constituent) அளவும் தேவையான இன்ன அளவில் உள்ளதாவெனவும் அறியக்கூடும். இவ்வறிவு பின்னர், மருந்து செய்முறையிலும், முடித்த மருந்தின் தர ஆய்விலும் உதவுவது உற்றுநோக்கல் வேண்டும். எடுத்துக்காட்டாக, குடஜாரிஷ்டத்தைப் பார்ப்போம். இதில் பயன்படுத்தப்படும் சிறப்புப் பொருளான குடசப்பாலைப்பட்டையில் உள்ள ஆல்கலாயிடுகளின் அளவை வரையறுக்கவேண்டும். இதனால், கியாழத்தில் உள்ள ஆல்கலாயிடுகளின் அளவை ஒப்பு நோக்கினால் கியாழம் சிறப்பாக முடிந்துள்ளதாவென அறிய வியலும். பின்னர் முடித்த அரிஷ்டத்தில் உள்ள ஆல்கலாயிடு களின் அளவை முன்னிரண்டு அளவுகளுடன் ஒப்பு நோக்கினால் எந்த உயர் அளவிற்கு அந்த ஆல்கலாயிடுகள் அரிஷ்டத்தில் பெறப்படவேண்டும் என்பதனைக் காட்டும். இதனால், மூலப் பொருட்களின் தரவரையறை பற்றிய ஆராய்ச்சிகளின் இன்றி யமையாமை நிறுவப்பட்டது.

2. மருந்து செய்முறைகளை வரையறுத்தலும் (Process standardization) மிக்க கருத்துடன் விளக்கமுறத் தெளிவாகச் செய்யப்படவேண்டும் மூலப்பொருட்கள் மிகச் சிறந்தனவாக இருப்பினும், கைக்கொள்ளப்படும் மருந்து செய்முறைகள் குறைபாடுள்ளவைகளாகவிருப்பின், முடித்த மருந்துகள் தரங் குறைந்தனவாகவே இருக்கும் ஆகையினால் மருந்து செய்யும் ஒவ்வொரு படியிலும் ஏற்படும் மாறுதல்களை அறிந்து அவற்றைக் கட்டுப்படுத்துவதோ அல்லது விரைவாக ஏற்பவோ செய்யத்தக்க முறைகளை ஆராய்ந்து கடைபிடிக்கவேண்டும். இத்தகைய மாறுதல்கள் வேதியியல் அல்லது பௌதிக (Chemical or physical Changes) மாற்றங்களாக அறியப்படலாம், இவ்வாறாக, மருந்துப் பொருட்களைச் சுத்தஞ்செய்யும் போதும், பொடிக்கும்போதும், அரைக்கும் போதும், காய்ச்சும்போதும், வடிக்கும்போதும், புடமிடும்போதும் ஏற்படும் இம்மாற்றங்களின் தன்மை (Nature) யையும், அவற்றின் காரணங்களையும் (Causes) அறிவதால், மூலப் பொருட்களிலுள்ள சத்துக்கள் வீணாவது தடுக்கப்படவும், சீரான தரமுள்ள மருந்துகளைச் செய்வதற்கும் வழிமுறை வகுக்க இயலும்.

எடுத்துக்காட்டாக, ஏலம், கிராம்பு, தக்கோலம், சிறுநாகப்பூ, சந்தனம இவற்றிலுள்ள மண எண்ணெய்கள் (Essential Oils) எளிதில் ஆவியாகக் கூடியவை (Volatile) யாகையால் சாதாரண முறைகளைக் கையாளும்போது பெரும்பகுதி காற்றிற் கலந்து வீணாகிவிடும். இவ்விரயம், அவற்றைப் பொடிக்கும்போதும் காய்ச்சும்போதும் ஏற்படுகின்றது. பொடிக்கும் பொறிகளிலும், வடிக்கும் வாலைகளிலும் சில மாறுதல்களைச் செய்வதாலும், வேறு சில முறைகளைக் கையாள்வதாலும் பேரளவு தடுக்கப்பட வழியுண்டு. இவ்வாறே 101 மடக்கு க்ஷீரபலா தயிலம் செய்யும்

போதும், 100 புட அப்பிரக பற்பஞ் செய்யும்போதும் ஒவ்வொரு மடக்கிற்குப் பின்னரும் புடத்தின் பின்னரும். மருந்து அடைந்துள்ள மாற்றத்தைக் கணக்கிட்டு, இததனைமுறை திரும்பச் செய்வதனுலேற்படும் நன்மைகளையும் அளவிடலாகும்

இங்ஙனம் பெறப்படும் அறிவு, முடித்த மருந்துகளின் தரத்தினை வரையறுக்கவும் பயன்படும்.

3. முடித்த மருந்துகளைத் தரவரையறை செய்வதன் நோக்கம். மருந்துத் தன்மையில் மாறுபாடுகளற்றதும் அல்லது இம்மாறுபாடுகள் ஒரு குறுகிய வரம்பிற்குள் கட்டுப்படுத்தப் பட்டதுமான (Therapeutically uniformly potent or optimum therapeutic activity variable only within a rarrow gamut) மருந்துகளைச் செய்வதேயாகும். இத்தகைய தரமுள்ள மருந்துகளே தொழிற்சாலையிலிருந்து விற்பனைக்கு வரவேண்டும் என்க. ஆனல் முடித்த மருந்துகளின் தரவரையறைகள், வெறும் குறியீட்டு நிலையெண்களாக (Numerical constants) மட்டும் இருத்தல் போதாது என்பதையும் நாம் உணரவேண்டும். இவற்றிற்கு வேதியியல் பௌதிகவியல் மற்றும் சிலபோது, உயிரியற் செயற்பாட்டுத் தன்மைகளும், (Chemical, Physical and Pharmacological data) வேண்டப்படுவனவாம்.

எடுத்துக்காட்டாக அரிஷ்ட வகைகளைக் காண்போம் அரிஷ்டங்களுக்கு அடர்த்தி எண் (Specific gravity) நிறம், (Colour) தெளிவு (Clarity) திடப்பொருள் செறிவு (Solid content) சருக்கரைப் பகுதி (Sugar content) சாராய வீதம் (Alcohol percentage) துவர்ப்புப் பொருட்செறிவு (Tannin content) ஆகியவை மட்டும் தரவரையறைக்குப் பயன்படாது, ஏனெனில் ஒரு குறிப்பிட்ட அரிஷ்டத்தில் இவற்றிற்கான குறியீட்டு நிலையெண்கள் (Numerical constants) மிக அகன்ற எல்லைக்குட்படுவன (Fall in a very wide range of variability) வாகவே உள்ளது. ஆகையால் பல அரிஷ்டங்களை ஒப்புநோக்கும்போது இவ்வெல்லைகள் பெருமளவில் மேற் படியக்கூடியன (Frequently Overlapping) வாக உள்ளது. ஆகவே இவற்ருேடுகூட, குறிப்பிட்ட அரிஷ்டத்திலுள்ள ஆல்கலாயிடுகள் அல்லது மணப் பொருட்கள் இவற்றை அடிப்படையாகக்கொண்டு வரையறைகளை வகுக்க வேண்டும். அஸ்வகந்தாரிஷ்டத்தில் அமுக்குராக்கிழங்கின் ஆல்கலாயிடுகளையும், குடஜாரிஷ்டத்தில் குடசப்பாலை ஆல்கலாயிடுகளையும் அடிப்படையாகக் கொள்ளலாகும் இவ்வாறே முஸ்தாரிஷ்டத்தில் கோரைக்கிழங்கின் மணப்பொருட் பகுதியை அடிப்படையாகக் கொள்ளலாம்.

இவ்வாருகவே, சூரணங்கள், இளகியங்கள், எண்ணெய்கள், நெய்கள் ஆகிய பல்வகை மருந்துகளையும் அவ்வவற்றிற் சேர்ந்த

குறிப்பிட்ட சரக்குகளின் தன்மைகளின் அடிப்படையில் வரையறுக்கலாம்.

பற்ப, சிந்தூர, இரசஔடத வகைகளையும்கூட, அவற்றின் பெரும்பான்மை, சிறுபான்மை வேதிப்பகுதி (Major and Minor Chemicals constituents) களைக் கொண்டு வரையறுக்கலாம்

இதுகாறும் கூறியவற்ருல், இந்திய மருந்து செய்தொழிலில் (Pharmaceutics of Indian Medicines) நாம் மேற்கொள்ள வேண்டியிருக்கும் ஆராய்ச்சி (Researches) களின் இன்றியமையாமையும், இவ்வாய்வுப் பணியின் பேரளவினையும், (Vastness) இதற்கான சில வழிமுறைகளையும் (Approaches) கண்டோம்.

இந்நாளில், ஆராய்ச்சி மற்றும் தொழில் வளர்ச்சிக்கான கூடங்கள் (Research and Development wings) எல்லாத் தொழில் துறைகளிலும் ஏற்படுத்த மத்திய அரசும் மாநில அரசுகளும் முயன்று ஊக்கமளித்து வருகின்றன. இதற்காகவே, தொழிற்சாலைகள் அவற்றின் ஆராய்ச்சித் துறையிலும் ஈடுபடுமாளுல், இத்தொழிற்சாலைகளுக்குக் கணிசமான அளவு வருமான வரிச் சலுகை (Income-Tax relief) காட்டலாமென்னுங் கருத்து மத்திய அரசில் நிலவுகின்றது. விரைவில் இச்சலுகைகள் நடைமுறைக்கு வருமென எதிர்பார்க்கலாம்.

அயல்நாட்டுத் தொழில் நுணுக்க உதவியால் நடக்கும் தொழில்களுக்கும்கூட இவ்வகை ஆராய்ச்சி-தொழில் வளர்ச்சிக் கூடங்கள் (R & D wings) தேவையென்று கூறப்படுவதால், அத்தகைய அயல்நாட்டுத் தொழில் நுணுக்க உதவியேதுமின்றி இயங்கிவருந் தொழிலான இந்திய மருந்து செய்தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் தமது ஆராய்ச்சி-தொழில் வளர்ச்சிக் கூடங்களை அமைத்துக்கொள்வது மிகவும் வேண்டற்பாலதென்பது தெளிவு. இவ்வாய்வுகள், இந்திய மருத்துவக் கலையைக் காத்தற்கு மட்டுமன்றி, மாறிவரும் வாழ்க்கை முறைகளுடன் இம்மருத்துவ முறைகள் தொடர்ந்து முன்னேற்றங் காணவும் உதவும்.

ஆக இந்திய மருந்து செய்சாலைகள், இத்தொழில் துறையின் தேக்கத்தினின்றும் (Stagnation) விடுபட்டு தொடர்ந்து நிலைத்து, மேற்கொண்டு முன்னேற்றங்காண வேண்டுமானுல், அவை உடனடியாக தத்தமது ஆய்வுக் கூடங்களை அமைத்துச் செயற்படுவதேயன்றி வேறு வழியில்லையென்பதனைத் தெளிந்து, முனைந்து முன்னேற வேண்டும்.

———

# ஆரோக்கிய கல்பத்துருமம்

## விஸர்பத்தில் பொதுவான சிகித்ஸை

திக்த கிருதம் :

பிரம்மி, பர்படகம், வேப்பம்பட்டை, பேய்புடல், கடுகு ரோகிணி, ஆடாதோடை வேர், வட்டத்திருப்பி வேர், மரமஞ்சள் இவை வகைக்கு 40 கிராம்; மூன்றேகால் லிட்டர் ஜலத்தில் இவைகளை இடித்துப் போட்டுக் கஷாயமிட்டு அரைக்கால் பங்கு மீதமாகக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும். பிரம்மி, கோரைக் கிழங்கு, நில வேம்பு, திப்பிலி, வெட்பாலையரிசி, சந்தனம் இவை வகைக்கு 10 கிராம்; இவைகளைக் கல்கமாக்கி 480 கிராம் நெய் சேர்த்துக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும் விஸர்பம், குஷ்டம், பிடகை, எரிச்சல், நாவரட்சி, தலை சுற்றுதல், அரிப்பு, பாண்டு, கண்டமாலை, புரையோடிய விரணம், அபசி, விஸ்போடம், வித்ரதி, குல்மம், வீக்கம், வெண்குஷ்டம், காமாலை, மயக்கம், உந்மாதம், ஹிருதய ரோகம், மச்சம், கிரஹணி நோய், அர்சஸ் ரக்தபித்தம், பிரதரம், மஹோதரம், பகந்தரம், அபஸ்மாரம், கண் மறைப்பு முதலிய நோய்களைப் போக்க வல்லது ரத்த மிகுதியாலும் பித்தச் சீர்கேட்டாலும் ஏற்படும் நோய்களில் மிகச் சிறந்தது.

மஹாதிக்தக கிருதம் :

தும்மட்டி வேர், ஆடாதோடை வேர், காஞ்சூரி வேர் பெருங் குரும்பை வேர், நன்னாரி வேர், மாகாளிக்கிழங்கு, வட்டத்திருப்பி, கோரைக்கிழங்கு தண்ணீர்விட்டான் கிழங்கு வேப்பம்பட்டை, கொன்னைப் பட்டை, ஏழிலம்பாலை பட்டை, நிலவேம்பு, மர மஞ்சள், மஞ்சள், பிரம்மி, திப்பிலி, கண்டதிப்பிலி பேய்புடல், விலாமிச்சை வேர், பர்படகம், திரிபலை, பதிமுகம், வசம்பு, வெட் பாலையரிசி, அதிமதுரம், சந்தனம், கடுகுரோகிணி அதிவிடயம், சீந்திற்கொடி இவை கல்கம், நெய்யளவில் நான்கில் ஒரு பங்கு; நெய் ஒரு பங்கு ஜலம் 8 பங்கு, நெல்லிக்காய் சாறு 2 பங்கு இவைகளைக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளலாம். திக்தகிருதத் தைக் காட்டிலும் மிகவும் குணம் தர வல்லது.

பாரந்தீமூலவல்காதி கிருதம் :

விருச்சி வேர் பட்டையின் கஷாயத்துடன் அல்லது விருச்சிப் பூவின் சாற்றுடன் திக்தக கிருத சாமான்களைக் கொண்டோ

மகாதிக்தக கிருத சாமான்களைக் கொண்டோ கல்கம் தயாரித்து நெய் கூட்டிக் காய்ச்சி உபயோகிக்க மிகவும் குணமுள்ளது.

தூர்வாமிருதாதி இருதம் :

அருகம்புல், சீந்திற்கொடி, தண்ணீர் விட்டான் கிழங்கு, நெல்லிக்காய் இவைகளின் சாறு மொத்தம் நாலு பங்கு, நெய் ஒரு பங்கு, அதிமதுரம் திரிபலை, வாய்விளங்கம், பரங்கிப்பட்டை, திப்பிலி, கண்டதிப்பிலி, கருஞ்சீரகம், மாசிக்காய் இவை கல்கம் (நெய்யளவில் கால் பங்கு) இவைகளைக் கிருதமாகக் காய்ச்சி உபயோகிக்கவும. விஸர்பம், அக்கி, வீக்கம், சொரி, கெட்ட புண் முதலான எல்லா உபத்ரவங்களும் தீங்கும்.

நிம்பேந்திரயவாதி இருதம் :

வேப்பம்பட்டை, வெட்பாலையரிசி, புத்தரிச் சுண்டை வேர் பட்டை, தும்மட்டி வேர், ஆடாதோடை வேர், சிறுகாஞ்சூரி வேர், வட்டத்திருப்பி, வாய்விளங்கம், கோரைக்கிழங்கு, திரிபலை, பதிமுகம், மரமஞ்சள் தோல், கருங்காலி, அதிமதுரம, முள்ளிலவம் பட்டை, ஏகநாயகம் வேர், தேக்கின் பட்டை, ஏழிலம்பாலைப் பட்டை, வெள்ளெருக்கம்பட்டை, ஓமவேர், இவைகளின் கஷாயம் நான்கு பங்கு; தென்னம்பூ தும்மட்டி, கையந்தரை, கரு முருங்கை இலை, கருநொச்சியிலை, சீந்திற்கொடி, ஸோமவல்லி யிலை, தேக்கிலை, பொன்னாங்கண்ணியிலை, பேய்புடல் இவைகளின் சாறு ஒரு பங்கு, நெய் ஒரு பங்கு நால்பால்மரப்பட்டை கோரைக் கிழங்கு. சந்தனம், கோஷ்டம், அதிமதுரம் கரப்பான் பட்டை, வாய்விளங்கம், வெட்பாலையரிசி செங்கழுநீர் கிழங்கு, வாழைக் கிழங்கு, மஞ்சிட்டி, மாசிக்காய், நன்னாரி, மாகாளிக்கிழங்கு, மருள் கிழங்கு, கார்போக அரிசி, கல் பாசி கொத்துமல்லி விதை இவை கல்கம்; நெய் தயாரித்து உபயோகிக்க விஸர்பங்கள் அனைத்தும் மறையும்.

பலாஸோமலதாதி இருதம் :

சிற்றுமுட்டி வேர், ஸோமவல்லி, வில்வவேர், பேய்புடல், வேர், நால்பால்மரப்பட்டை, வேப்பம்பட்டை, கொன்னைப் பட்டை, புத்தரிச் சுண்டைவேர் பட்டை, மரமஞ்சள், கருங்குரிஞ்சி வேர், தேக்குப்பட்டை, தேவதாரு, மஞ்சிட்டிப் பொடி, முள்ளுக் கத்திரிவேர் இவைகளின் கஷாயம்; ஓரிலைவேர், மூவிலைவேர், ஜீரகம், கருஞ்சீரகம், சோம்பு அதிமதுரம், அரத்தை, கருங்காலி வைரம், அகில், புங்கம்பட்டை, அரளிவேர் பட்டை, திரிபலை, இலுப்பை வைரம், நன்னாரிவேர், மாகாளிக் கிழங்கு, செம்புர

வள்ளிக் கிழங்கு, கோரைக் கிழங்கு, வாழைக்கிழங்கு, கடுகு ரோஹிணி, வெட்பாலை அரிசி, செங்கழுநீர் கிழங்கு, பதிமுகம், விருச்சி மொட்டு, விலாமிச்சை, கார்போகரிசி, வெள்ளைச்சாரணை வேர், கோரோசனை, கச்சோரம், மான் கொம்பு, ஆமையோடு முத்துச்சிப்பி, தாளகம், பவழம், எருக்கம் பழுப்பு, பேய்பீர்க்கு வேர் பீர்க்கு வேர், தும்பைப்பூ, ஓமம், ஜீரகம் இவை கல்கம்; நெய், நெய்க்குச் சமம் நெல்லிக்காய், கரும்பு இவைகளின் சாறு; இவைகளை நெய்யாகக் காய்ச்சி, மேலுக்குத் தடவி உள்ளுக்கும் சாப்பிட விஸர்ப்பங்கள் போகும். பலம் அதிகரிக்கும். பூதோபத்திரவங்கள் நீங்கும்.

விஸர்பாந்தக கிருதம் :

காட்டுத் துளசி வேர், வில்வ வேர், ஆடாதோடை வேர், காஞ்சூரி வேர், குமிழம் வேர், காட்டு முல்லை வேர், ஏகநாயகத்தின் வேர், கருநொச்சி வேர், பூனைக்காலி வேர், ஓரிலை வேர், மூவிலை வேர், பெருங்குரும்பை, அகோரி வேர், வட்டத்திருப்பி, தும்பட்டிவேர், பேய்பீர்க்கின் வேர் இவைகளின் கஷாயம்; நால்பால் மரப்பட்டை, கஞ்ஜிக்கொட்டம் பட்டை, கருங்கொட்டம் பட்டை, நரச்சிக் கொட்டம் பட்டை இவைகளின் கஷாயம்; துளசி கருந்தும்பையிலை கல்யாண முருங்கையிலை தென்னம்பூ இவைகளின் சாறு; நெய்யும் தேங்காய் எண்ணெய்யும் சம அளவு; ஏலரிசி வெட்பாலையரிசி சிறுதேக்கு கோரைக் கிழங்கு, வாய்விளங்கம், கொத்துமல்லி விதை, அதிமதுரம், வாலுளுவை கார்போகரிசி, விளாமிச்சை வேர், ஜீரகம் இவை கல்கம்; இவைகளைக் கொண்டு நெய் தயாரித்து மேலுக்கும் பூசி உள்ளுக்கும் சாப்பிட விஸர்ப்பங்கள் நீங்கும்.

ஸித்தயோக கிருதம் :

கருங்காலி வைரம், 4 கிலோ இடித்து 160 லிட்டர் ஜலத்தில் விட்டுக் கஷாயமிட்டு 2 லிட்டர் மீதமாகக் காய்ச்சி, சம அளவு ஸோம வல்லி கஷாயம் சேர்த்து வடிகட்டிக்கொள்ளவும் திரிகடு, திரிபலை, அதிமதுரம், கோரைக்கிழங்கு, வாய்விளங்கம் சதகுப்பை, கொத்துமல்லி விதை, ஏலரிசி, வெட்பாலையரிசி, சிறுநாகப்பூ இவை கல்கம், நெய் 640 கிராம், கிருதமாகக் காய்ச்சிச் சாப்பிட எல்லா விஸர்பங்களும் நீங்கும்.

அம்ருதாபிருஹத்யாதி கிருதம் ;

சீந்திற்கொடி, முள்ளுக்கத்திரி வேர், இவைகளின் கஷாயம்; ஜாதி இலை, கூர்க்கிலை, கஞ்ஜிக்கூர்க்கிலை, திருச்சிடை, பாகல்

இலை, நாவலிலை, பெருங்குருப்பை, சிறுநாவல்பூ கஞ்ஞிக்கொட்டத்தின் இலை, அவுரி இலை, மலையமுக்கி வேர், கல்யாண முருங்கை இலை இவைகளின் சாறு; சந்தனம் கோரைக்கிழங்கு, திரிபலை, ஏலரிசி, லவங்கப்பட்டை, பச்சிலை, சிறுநாகப்பூ, அதிமதுரம், கோஷ்டம் இவை கல்கம்; நெய் சேர்த்துக் காய்ச்சிக்கொள்ளவும். எல்லா விஸர்பங்களும் புண்களும் போம்.

## ஆஸவங்கள்

கதிராஸவம்: கருங்காலி வைரம் 5 கிலோ, ஜலம் 50 லிட்டர், கஷாயம் மீதி $6\frac{1}{4}$ லிட்டர், சீந்திங்கொடி ஸோமவல்லி, நால்பால் மரப்பட்டை அருகம்புல், கரிசலாங்கண்ணி, விருச்சிப்பூ ஜீரகம், கருஞ்சீரகம், பேய்த்தும்மட்டிவேர் இவை வகைக்கு 40 கிராம் இவைகளை இடித்துக் கஷாயத்திலிட்டுக் கலக்கிப் பானையிலிட்டு வாய்க்குத் துணிகட்டி கடும்வெயிலில் ஒருநாள் வைத்து எடுத்துத் தேன் ஸம அளவு சேர்த்துப் பழகிய பானையிலிட்டு வைக்கவும். (பானைக்கு உட்புறம் வெள்ளைலோத்திரப்பட்டை, தாமரைத்தண்டு அகில், சந்தனம் இவைகளைப் பன்னீர் விட்டரைத்து பூசி உலர்த்திப் பின் நெரியரிசிப்பால் வெள்ளைக் குங்கிலியம் அதிமதுரம், குந்துருக்கம், சந்தனம், செஞ்சந்தனம், விலாமிச்சைவேர், இவைகளை நெய் விட்டுப் பிசிறித் தணலிலிட்டு பானைக்குப் புகை காட்டிப் பின்னர் உபயோகிக்கவும். பிறகு அதில் தாழம்பூவை நறுக்கிப் போட்டு மணமுண்டாக்கிக் கொள்ளவும்) மூன்று நாள் கழித்து உபயோகிக்கலாம் மிகவும் சிறந்த ஆஸவம். குஷ்டம், துஷ்டவிரணம், விஸர்பம் இவை நீங்கும்

சிம்சபாஸவம்: கதிராஸவத்தில் கூறியபடி கருங்காலி வைரத்திற்குப் பதில் இரிமுள் வைரத்தைச் சேர்த்துத் தயாரித்தது சிம்சபாஸவமாகும். விஸர்ப்பத்தில் மிகச் சிறந்தது.

வல்காஸவம்: நால்பால்மரப்பட்டை, கஞ்ஜிக்கொட்டவேர் மேல்தோல் கடம்பப்பட்டை, கருங்காலிப்பட்டை இவைகளைக் கஷாயமிட்டு வடிகட்டி கஷாயத்தில் பாதி தேன் சேர்த்து கதிராஸவத்திற்குத் தயாரானதுபோல் தயாரான பானையிலிட்டு சுக்கு, மிளகு திப்பிலி ஜீரகம், மாசிக்காய், வாய்விளங்கம், கொத்துமல்லி விதை ஏலரிசி. வெட்பாலையரிசி, கார்போகரிசி, வாலுளுவை, தும்மட்டிவேர், தும்பைப்பூ விருச்சிப்பூ. தேவதாரு, நன்னாரிவேர், விளாமிச்சைவேர், கருங்குரிச்சிவேர், அதிமதுரம் இவைகளின் தூள் (தேனில் மூன்றில் ஒரு பங்களவு) ஒரு துணியில் கிழிகட்டி, ஐந்து நாள் அக்கஷாயத்தில் நனையும்படி வைத்திருந்து ஆறுவது நாள் காலையில் எடுத்து அன்று முதல் கொடுத்து வரவும். விஸர்ப்பங்கள் குறையும்.

புஷ்பாஸவம்: தும்பைப்பூ, மாம்பூ, புரசம்பூ, அரளிப்பூ, முருங்கைப்பூ, அசோகப்பூ, விருச்சிப்பூ சம்பகமொட்டு இவைகளைக் கஷாயமிட்டு, கஷாயத்திற்குப் பாதி தேன்சேர்த்து வல்காஸவத்தில் கூறப்பட்ட பிரக்ஷேபத்தூள் துணியில் முடித்துத் தொங்க விட்டு மூன்று நாள் வைத்திருந்து 4-ம் நாள் முதல் உபயோகிக் கலாம். எல்லா விஸர்ப்பங்களும் போகும்.

## குளிகைகள்

மஞ்சிஷ்டாதி குளிகை: மஞ்சிட்டி, அதிமதுரம், விலாமிச்சை வேர், இரிமுள்வைரம், கடுக்காய் விதை, மாசிக்காய், மருதம் பட்டை, கோரைக்கிழங்கு, தும்மட்டிவேர், ஏகநாயகம்வேர், தேக்கம்பட்டை, சந்தனம், தண்ணீர்விட்டான்கிழங்கு, சீந்திற் கொடி, நன்னாரிவேர், மரவள்ளிக்கிழங்கு, நெல்லிமுள்ளி, பால் முதுக்கன்கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு, அடபதியன் கிழங்கு, சதகுப்பை, வாய்விளங்கம், வெட்பாலையரிசி, ஏலரிசி, கார்போகரிசி, கொத்துமல்லி விதை, வாலுளுவையரிசி, ஜீரகம், கருஞ்சீரகம், பெருஞ்சீரகம், நொச்சிவேர், ஜாதிக்காய் இவைகளை விருச்சிப்பூவின் சாற்றிலும், நால்பாமரப்பட்டை கஷாயத்திலும், திரிபலை கஷாயத்திலும் அரைத்து இலந்தைக்கொட்டை அளவு மாத்திரை செய்து நிழலிலுலர்த்திக் கொள்ளவும் விஸர்ப்பங் களில நல்லது.

லாக்ஷாதி குளிகை: கொம்பரக்கு, நன்னாரி, மஞ்சிட்டி, கொத்துமல்லிவிதை, தேவதாரு, நிலவேப்பு, தென்னம்பூ, மாசிக்காய், சந்தனம், செஞ்சந்தனம், தும்மட்டிவேர், தும்பைப்பூ, மூக்கரட்டைவேர், கடுக்காய்கொட்டை, சங்கு, பவளம், மான்கொம்பு, முள்ளம்பன்றி முள் இவைகளின் பஸ்மம், தூணியாங்கம், கரப்பான் பட்டை, சதகுப்பை, ஜீரகம், கருஞ்சீரகம், பெருஞ்சீரகம், விருச்சிப் பூ மொட்டு, அருகம்பில்லு, தேக்கின் பட்டை, முருங்கைப் பட்டை, நன்னாரி, கல்பதம், வசம்பு, நீரடிமுத்து, மரமஞ்சள் தோல் பேய்ப் புடல், அதிமதுரம், பதிமுகம், வெட்பாலை அரிசி இவை வகைக்குச் சமனெடை, எல்லாவற்றிற்கும் சமம் வாலுளுவை இவைகளை இடித்துத் தூள்செய்து விருச்சிப்பூ வேர் கஷாயம் விட்டு மூன்று தினம் அரைத்துக் கொள்ளவும். பிறகு தேக்கின் துளிர், கரு முருங்கைத் துளிர், கருநொச்சித் துளிர், கஞ்சிக்கொட்டைத்துளிர், இவைகளின் சாற்றில் ஒவ்வொரு நாள் அரைத்து இலந்தைக் கொட்டையளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்திக்கொள்ள வும். இதை கடம்பம் பட்டை, கருமுருங்கைப்பட்டை, விருச்சி வேர்ப்பட்டை இவைகளில் ஒன்றின் கஷாயத்துடனே, கருஞ்

சீரகம், மாசிக்காய், வெள்ளைலோத்திரப்பட்டை, கொத்துமல்லி விதை இவைகளின் கஷாயத்துடனே சாப்பிடவும். எல்லா விஸர்ப்பங்களும் சமிக்கும்.

விஸர்ப்பாசனி குளிகை: பறங்கிப்பட்டை 8 பங்கு; கரப்பான் பட்டை 10 பங்கு; மாசிக்காய் 2 பங்கு; கருங்காலி வைரம் 5 பங்கு இவைகளை இடித்துத் தூளாக்கி கருங்காலி வைரக் கஷாயம்; கருமுருங்கை இலைக் கஷாயம், ஆட்டுப்பால், முக்காப்பீரகத்திலைக் கஷாயம், தும்மட்டி வேர், பேய்ச்சுரை வேர், கோரைக் கிழங்கு இவைகளின் கஷாயம், இவைகளைக்கொண்டு ஒவ்வொரு நாள் அரைத்து, இலந்தைக் கொட்டையளவு மாத்திரை செய்து தேன், நெய் சேர்த்துச் சாப்பிடவும், ரத்தசுத்தி ஏற்படும். குஷ்டத்திலும் விஸர்ப்பத்திலும் நல்லது.

தலைவலி இருந்தால்: விஸர்ப்பம் காரணமாக தலைவலி கடுமையாக இருந்தால் சந்தனம், காவிமண், கோரைக்கிழங்கு, கடுக்காய் இவைகளை முலைப்பாலில் அரைத்து நெற்றியில் பூசவும்.

கடும் ஜ்வரமிருந்தால்: நிலவேம்பு, கொத்துமல்லி விதை, காஞ்சூரிவேர், பர்படகம், இவை வகைக்கு 1 தோலா, புஷ்கர மூலம் 4 தோலா இவைகளின் கஷாயத்தை சர்க்கரை சேர்த்து சாப்பிடவும்.

சித்தப்பிரமை இருந்தால்: விஸர்ப்பமுள்ள சிசுவிற்கு சித்தப்பிரமை ஏற்படின் கடுகு, பருத்தி இலை, சென்னிநாயகம், இவைகளை கோழி இரத்தத்தால் அரைத்து நெற்றியில் தடவலாம்.

தலை கனத்து நிமிர முடியாமலிருந்தால்: நெல்லிமுள்ளி, சிற்றுமுட்டி இலை, கோரைக்கிழங்கு, அதிமதுரம், கோஷ்டம், சந்தனம், விலாமிச்சைவேர், வெட்டிவேர், இவைகளைத் தூள் செய்து முலைப்பாலும் வெண்ணெய்யும் சேர்த்துக் குழைத்து நெற்றியில் தடவவும்.

ருசியின்மை மிகுந்திருந்தால்: விருச்சிப்பூ வேர்ப்பட்டை, இஞ்சி, தும்பைப்பூ, மாந்துளிர் இவைகளின் கஷாயத்தை சர்க்கரை, தாளீசபத்திரித் தூள் அல்லது தேன் சர்க்கரை சேர்த்துக் கொடுக்கலாம்.

[விஸர்ப்ப சிகித்ஸை முற்றிற்று.]

## மஸூரிகா — வைசூரி

வயல் பயறளவில் உடல் முழுவதும் ஒரே சமயத்தில் பரவி ஒரே விதமான வளர்ச்சியும் சமனமும் பெறும் இந் நோயை மஸூரிகா என்பர். [மஸூரம்: வயல் பயறு]

அறிகுறி: ஜ்வரம், வாய் உலர்தல், உடல் வலி அங்கங்கள் தளர்ந்திருத்தல், அரோசகம், மயிர் சிலிர்த்தல், தலைவலி, கண் சிகப்பாதல், பீநஸம் முதலியவை வைஸூரி வருவதன் அறிகுறிகள் ஜ்வரப் பகுதியில் கூறியுள்ள மற்ற லக்ஷணங்களைக் கொண்டு வாத-பித்த-கப சம்பந்தத்தை அறிந்து கொள்ளலாம்.

பொது சிகித்ஸை: பித்த கோபமோ ரத்தக் கெடுதியோ இல்லாமல் இது ஏற்படாதாகையால், குளிர்ந்த பூச்சுக்கள், ரத்தத்தை சுத்தி செய்து தெளிவுபடுத்துபவைகளாயுமுள்ளவை நல்லது.

மேல்பூச்சு: மஞ்சள் பப்பாளித் தோலை யானையடியன் சாற்றில் அரைத்து வெண்ணெய் சேர்த்துப் பூசவும்.

வருமுன்: ஜ்வரம் முதலிய பூர்வ ரூபங்களைக் கொண்டு வைஸூரி வரலாம் என்பதை முன் கூட்டி அறிய முடிந்தால், வேப்பம்பட்டை கஷாயத்துடன் அவிபத்தி சூர்ணத்தைக் கொடுக்கலாம். அத்திப் பழத்துடன் அதிமதுரம் சேர்த்துப் பாலுடன் கொடுக்கலாம் வல்லாரையின் சாற்றை சர்க்கரை சேர்த்துக் கொடுக்கலாம். நெல்லிமுள்ளி, குந்துமணி, வெள்ளரி விதை, சந்தனத் தூள் இவைகளின் சூர்ணத்தை அரிசி கழுவிய ஜலத்துடன் சாப்பிடலாம் இவைகளால் ஜ்வரம் வைஸூரியாகாமல் குறைந்து விடும்.

வந்த பின்: சிறுகாஞ்சூரி வேர், சந்தனம், விலாமிச்சை வேர், நன்னாரிவேர், அதிமதுரம், பர்படகம், இவைகளின் கஷாயம், சர்க்கரை தேன் சேர்த்துச் சாப்பிட நல்லது. வாழைக்கிழங்கு கீரைப் பாலை, அதிமதுரம், கோரைக்கிழங்கு, சந்தனம், விலாமிச்சை வேர், வெட்டிவேர் இவைகளின் கஷாயம் முன்போல் சாப்பிடலாம். சிற்றுமுட்டி வேர், கோரைக்கிழங்கு, நெல்லிமுள்ளி பேய்புடல், வேம்பம்பட்டை, சுக்கு, கோஷ்டம், கொத்துமல்லி விதை இவைகளின் கஷாயமும் தேன் சேர்த்துச் சாப்பிடலாம் தாமரை வளையம். கோரைக்கிழங்கு, அடபதியன் கிழங்கு, தண்ணீர் விட்டான் கிழங்கு மஞ்சள், மரமஞ்சள் இலுப்பை வைரம் அதிமதுரம், நன்னாரி, தென்னம்பாளையரிசி, வெட்டிவேர், சந்தனம், செஞ்சந்தனம், கோஷ்டம், திராக்ஷை, எலுமிச்சம்பழத் தோல், பர்படகம், நன்னாரி, வெள்ளை லோத்ரப் பட்டை, வாழைக்கிழங்கு, அருகம்புல், ஈச்சங்காய், கொத்துமல்லி விதை, நெல்லிமுள்ளி இவைகளின் கஷாயம் தேன் சேர்த்துச் சாப்பிட நல்லது.

தூர்வாகிருதம்: அருகம்புல் 10 கிலோ இடித்து $2\frac{1}{2}$ லிட்டர் பாலில் போட்டுக் கசக்கிப் பிழிந்தெடுத்த சாறு, நெய் 640 கிராம் நால்பால்மரப்பட்டை, மஞ்சிட்டி, வெட்டிவேர், விலாமிச்சை வேர்,

சந்தனம், அதிமதுரம், வாழைக்கிழங்கு, நன்னாரி, ஸரளதேவதாரு இவைகளின் கல்கம் 160 கிராம், நெய்யாகக் காய்ச்சி வடிகட்டி தேன் சேர்த்துச் சாப்பிடவும். தேன் சேர்க்காமல் மேலே பூசிக்கொள்ளலாம்.

21-வது நாள் நால்பால்மரப்பட்டை கஷாயத்தில் தயாரித்த நெய் அல்லது தேங்காய் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்விக்கவும்.

கண்ணில் பிழிய: நந்தியாவட்டை மொட்டு, பேரால் மொட்டு, அரசு மொட்டு விருச்சி மொட்டு, செங்கழனீர் கிழங்கு, திரிபலை, லோத்திரப்பட்டை, அதிமதுரம், அடபதியன் கிழங்கு தேத்தான் வித்து — இவைகளின் கஷாயத்திற்குச் சமம் முலைப்பாலும் சேர்த்து, அருகம்புல், மரமஞ்சல், திரிபலை, சிவப்பு உள்ளி, கொத்துமல்லி விதை இவைகளை இடித்துக் கிழி கட்டிக்கொண்டு முன்சொன்ன கஷாயத்தில் தோய்த்து ஒருமணி வைத்திருந்த பின்னர் எடுத்துக் கண்களில் பிழிய கண்கள் தெளியும். கண்களில் எரிவு, சிகப்பு அரிப்பு, வலி, நீங்கி கண்கள் பலம் பெறும். எல்லாக் கண்நோய்களிலும் சிறந்த குணம் தரும்.

---


# நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்
N. வைத்யநாதன், R. M. P.

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS.,


MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

## இம்ப்காப்ஸ்

## புராதன பாரம்பரியத்துடன் நவீன தொழில் நுட்பமும் இணைந்து நிற்கும் நிறுவனம்.



இம்ப்காப்ஸ் இந்திய மருத்துவர்களின் இணையில்லாத ஒரு கூட்டுறவு நிறுவனம். புராதன நூல்களில் கூறியுள்ள முறைகள், தரங்களை கண்டிப்பான முறையில் பின்பற்றி ஆயுர்வேத, சித்த, யூனானி மருந்துகளை அது தயாரித்து வருகிறது. மருந்துகளை தயாரிக்கும் ஒவ்வொரு கட்டத்திலும் அதிக கடுமையான முறையில் தரப் பரிசோதனை செய்யப்படுகிறது. புராதன மருந்துகளை தயாரிப்பதில் நவீன பாககிங் முறைகளையும் இயந்திரங்களையும் இம்ப்காப்ஸ் பயன்படுத்தி வருகிறது. சுதேச மூலிகைள் பற்றிய இடைவிடாத ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இம்ப்காபஸ் புராதன இந்திய மருந்துகள் சம்பந்தமாக ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கப் பாடுபடுகிறது.

Impcops

**உண்மையான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளுக்கு பெயர் பெற்ற நிறுவனம்**

இம்ப்காப்ஸ் மருந்துகள் எல்லா முக்கிய மருந்து கடைகளிலும் கிடைக்கும்

**இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.**

அடையார், சென்னை 20.

**விற்பனை நிலையங்கள்:** 4/86, மவுண்ட் ரோடு, சென்னை-2. போன்: 8652

48, சொத் மாஸி தெரு, மதுரை. போன்: 30875

16, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14.

maa/IMP/961/M TAM

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்டகால பரீக்ஷை அனுபவத்தினுல்

கண்டுபிடிக்கப்பட்ட கைகண்ட பலனளிக்கும்

# "சக்தி சஞ்ஜீவி"

(REGD)

குழந்தைகளுடைய ஈரல் குலேகட்டிகளே

எந்நிலேயிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

**சக்தி விலாஸ வைத்தியசாலா**

கரூர் (S. Ry.)


Edited and published by Dr. T. S. Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2
Printed at Githa Press, Tiruchirapalli-2.